# வாசுதேவநல்லூர், எஸ்.தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் கேம்பஸ் இண்டர்வியு

வாசுதேவநல்லூர், எஸ்.தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் பெட்ரோ கெமிக்கல் இஞ்சினியரிங் மாணவர்களுக்கு 27.12.2023 அன்று கல்லூரியில் கேம்பஸ் இன்டர்வியூ நடத்தப்பட்டது. சென்னையிலுள்ள ஏசியன் பெயின்ட்ஸ் நிறுவனம் கலந்து கொண்டு கேம்பஸ் இண்டர்வியூவை நடத்தியது. அன்று மாலை வளாகத்தேர்வில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கும் விழா நடைபெற்றது விழாவிற்கு எஸ்.தங்கப்பழம் கல்வி குழும நிறுவனர் திரு.எஸ்.தங்கப்பழம் அவர்கள் மற்றும் எஸ்.தங்கப்பழம் கல்வி குழுமத்தின் தாளாளர் திரு.எஸ்.டி.முருகேசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கல்லூரி முதல்வர் சி.பாலமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். சென்னையிலுள்ள ஏசியன் பெயின்ட்ஸ் நிறுவனம் மனிதவள மேம்பாட்டுத் துறைத்தலைவர்கள் திரு.சக்திவேல் மற்றும் திரு.கோவலன் அவர்கள் மாணவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கினார்கள். வளாகத் தேர்வு ஏற்பாடுகளை வேலைவாய்ப்பு அலுவலர், அனைத்து துறை தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் செய்திருந்தனர்.